# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, பிப்ரவரி 15, 2025 Weekly E-paper ● February 15, 2025




# அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கல்லும்...

சுப.வீரபாண்டியன்

## அரண்மனை! ஆலமரம்! வெட்டவெளி!

## ‘செங்கல்’ அண்ணாமலை

தலையங்கம்

## மேக்கப் போட்டு வரும் அகத்தியக் கரடி!

பிரின்ஸ் என்னாரெஸ் பெரியார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, பிப்ரவரி 15, 2025

Weekly E-paper • February 15, 2025


# அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கல்லும்...

சுப.வீரபாண்டியன்




அடிப்போம், உடைப்போம் என்பதுவே இன்றைய அரசியலின் அடிப்படையாகப் போய்விட்டது! அந்த வரிசையில் இப்போது அண்ணாமலையும் சேர்ந்திருக்கிறார்.

தன் மாநிலத் தலைவர் பதவி பறிபோக இருக்கிறதோ என்கிற அச்சமும், அண்ணாமலையின் பதற்றத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம்! பாஜக மாநிலத் தலைவர் பொறுப்பிலிருந்து அவரை நீக்கிவிட்டு, நயினார் நாகேந்திரனைத் தலைவர் ஆக்கப் போகிறார்கள் என்னும் செய்தி உலா வந்து கொண்டிருக்கிறது. ஹெச். ராஜா, பொன் ராதாகிருஷ்ணன், வானதி, தமிழிசை ஆகியோரும் அந்தப் பதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்! அது அவர்கள் உட்கட்சிப் பிரச்சனை. யாரை நியமித்தாலும் தமிழ்நாட்டில் பாஜக எழ முடியாது என்பது நாடறிந்த செய்தி !



எனவே இந்தத் தருணத்தில், திமுகவுக்கு எதிராகக் கூடுதல் கடுமை காட்டினால், தலைவர் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று அண்ணாமலை கருதுகிறார் போலிருக்கிறது! அதற்காகவே அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கல்லையும் உருவாமல் விடமாட்டேன் என்று வீர வசனம் பேசி இருக்கிறார்! உங்களால் அறிவாலயத்தில் உள்ள ஒரு புல்லைக் கூடப் புடுங்க முடியாது என்று அதற்கு ஆர். எஸ். பாரதி பதிலடி கொடுத்திருக்கிறார்!

அண்ணா அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கல்லும், கலைஞரின் கண் பட்டு எழுந்திருக்கிறது! அந்தக் கட்டிடம், கலைஞரின் கனவு! கழகத்தின் உணர்வு!!

சென்னை ராயபுரத்தில் ஒரு சிறிய வீட்டில் தொடங்கப்பட்டு, அறிவகமாகி, பிறகு அன்பகமாகி, இன்று அண்ணா அறிவாலயமாகக் கழகத்தின் தலைமை நிலையம் உயர்ந்து நிற்கிறது!

அண்ணா அறிவாலயத்தில் வரலாற்றை உள்ளே பொதிந்து கிடக்கும் இது யாகத் தழும்புகளை கொள்கை செறிவை முழுமையாக நிமிர்ந்து பார்க்க அண்ணாமலையின் உயரம் போதாது!

அண்ணாமலைகள் வருவார்கள்! அண்ணாமலைகள் போவார்கள்! அண்ணா அறிவாலயம் என்றென்றும், தனித்து நிற்கும் .... நிலைத்து நிற்கும்!

•

# ஆளுநரின் அதிகாரம், மாநில சுயாட்சியின் புதைகுழி.



கு.சா. ஆனந்தன்

" ஆளுநர் நியமனம் குறித்த நமது அரசியலமைப்பில் வகை செய்யப்பட்டுள்ளது - மக்களாட்சி முறையில் காலத்திற்கும் ஒவ்வாததாகும். இவர், மத்திய அரசால் நியமிக்கப்பட்டு மக்கள் அரசுக்குப் பொறுப்புள்ள அதிகாரியாவார். எனவே உள்ளூர் நிலைமைகளையும், அரசியல் நிலைமைகளையும் இவர் அறிந்திருக்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆளுநர் பதவிக்காகச் செய்யப்படும் செலவும் சமதர்ம சமுதாயத்திற்கு ஏற்றதாய் இல்லை. இச்செலவு வீணானது. இதனைக் கைவிடலாம். (மாநில) அமைச்சர் ஆளுநருக்குக் கீழ்ப்பட்டவர் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவ்வாறாக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதி (மாநில அமைச்சர்) ஒருவர் சட்டக் கோட்பாட்டின்படி மைய அரசுப்பிரதிநிதியின் ஊழியராக இருக்கிறார். ஆளுநர் பதவியை எடுத்து விடுவதற்கு உற்ற தருணம் இதுவேயாகும்"

(மாநில சுயாட்சி - இராசமன்னார் குழு அறிக்கை குறித்துத் தமிழ்நாடு அரசின் கருத்துரை-1974) 'மலர்க மாநில சுயாட்சி' - கு.சா. ஆனந்தன், தொகுதி-2; பக்கம்: 176.

# அரண்மனை! ஆலமரம்! வெட்டவெளி!

அறிஞர் அண்ணா அவர்கள் 11-8-1957 -ல் மதுரையில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் கீழ்கண்டவாறு கூறுகிறார் :

"எப்படி சித்தார்த்தர் அரண்மனையிலே பிறந்தாலும் அவர் புத்த மார்க்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால் அரசமரத்தடிக்கு வந்தாரோ, அதைப்போல அரண்மனையிலே இருந்த ஜஸ்டிஸ் கட்சி, வெட்டவெளிக்கு - ஆலமரத்தடிக்கு - வந்தால்தான் அது மக்களுக்குப் பயன்படும் என்று சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் அரண்மனையிலே இருந்த ஜஸ்டிஸ் கட்சியை பெரியார் ராமசாமி மிகப்பாடுபட்டு- எங்களையெல்லாம் துணைக்கு வைத்துக்கொண்டு - ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தார்.

" ஆலமரத்தடிக்கு வந்த பிறகு ஜஸ்டிஸ் இயக்கம் இன்றைய தினம் நீண்ட நாளைக்கு ஆலமரத்தடியிலேயே இருந்துவிடக் கூடாதென்று நான் மேலும் கொஞ்சம் விரிவான திடலுக்கு அழைத்து வந்திருக்கிறேன். பெரியார் ராமசாமி ஆலமரத்தடியிலே இருந்து கொண்டால் போதுமென்று எண்ணிவிட்டார்"

அரண்மனை!
ஆலமரம்!
வெட்டவெளி!

-இவை திராவிட இயக்கம் கடந்துவந்த மூன்று பருவங்களையும், அதற்குக் காரணமாக இருந்த இயக்கத்து மூலவர்களயும் குறிக்கின்றன.

வெட்டவெளியில் குவிந்தவர்களை உருப்படியான சிப்பாய்களாக்கி



அவர்களை லட்சியபுரி நோக்கி அணிவகுக்கச் செய்தவர் நம் அண்ணன்!

அந்த லட்சிய தீபத்தைக் கையில் ஏந்திக்கொண்டு அந்த அணிவகுப்பை நடத்தி வருபவர் கலைஞர்!

அதனால்தான் தி.மு.கழகம் தனது இலச்சினையில் பெரியார்-அண்ணா-கலைஞர் ஆகிய மூவரின் திசைகாட்டும் துருவ நட்சத்திர முகங்களை முத்திரைகளாகப் பதித்து நமது இனப்போராட்டத்தை - இலட்சியப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

'திராவிட இயக்க வரலாறு', தொகுதி -1; பக்கம்: 149-150
முரசொலி மாறன்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்



# 'செங்கல்' அண்ணாமலை

அண்ணா அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கலையும் உருவி, தி.மு.கழகத்தைக் காலிபண்ணும் வரையிலும் நான் பா.ஜ.கவின் மாநிலத் தலைவராக இருப்பேன் என்று செய்தியாளர்கள்முன் திருவாய் மலர்ந்துள்ளார் திருவாளர் அண்ணாமலை.

அடுத்த நிமிடமே, 'இந்தியா டுடே - சி வோட்டர்' இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில், இன்றைய நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் தமிழ் நாட்டில் தி.மு.க கூட்டணி 39 தொகுதிகளிலும் வெற்றிபெறும். தி.மு.கவின் வாக்கு சதவீதம் இப்போது 5 விழுக்காடு உயர்ந்துள்ளது. அ.தி.மு.க 3 விழுக்காடு சரிந்துவிட்டது, பா.ஜ.க போணியாகாது என்றது தொலைக்காட்சி செய்தி.

பாவம் அண்ணாமலை! பெரியார் மண்ணில் படுக்கக்கூட இடம் கிடைக்காது பா.ஜ.கவுக்கு என்பது கூடத் தெரியாமல் இருக்கிறாரே.

தி.மு.கழகம் என்பது கட்சியல்ல; அது, மக்கள் இயக்கம், மக்களுக்கான இயக்கம்.

1916 ஆம் ஆண்டில் திராவிட இயக்கமாக வேர்விட்டு ஆர்ப்பாட்டம், மறியல், விலைவாசி உயர்வுக்கு எதிராகப் போராட்டங்கள், இந்தி எதிர்ப்பு உள்படப் பல போராட்டங்கள், கைது, சிறை, சித்திரவதை என்று மக்களுக்காகக் களமிறங்கி நெருப்பாற்றைக் கடந்து வந்து, 1967இல் மக்களால் ஆட்சியில் அமர்ந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

கடவுளை மறுக்கும் தி.மு.க இதுவரை எந்தக் கோயிலையும் இடித்ததில்லை, பா.ஜ.கவைப் போல. கல்வியில், வேலை வாய்ப்பில், தொழில்துறையில், மருத்துவத்தில், மகளிர் மேம்பாட்டில் என அனைத்துத் துறைகளிலும், மற்ற மாநிலங்களுக்குமுன்னோடியாய் இருக்கிறது 'திராவிட மாடல்' அரசு.

மோடியைப் போல ஆகாயத்தில் பறந்து கொண்டு இருக்கவில்லை எங்கள் முதல்வர் ஸ்டாலின் அவர்கள். தெருக்களில், சாலைகளில் நடந்து சென்று மக்களின் குறைகளைக் கேட்டு உரிய தீர்வு காண்கிறார் அவர். தி.மு.கழகம், மக்கள் இயக்கமாக வளர்ந்து கொண்டு இருக்கிறது.

அதனால், கமலாலயத்தின் செங்கலை யாரும் உருவிவிடாமல் பார்த்துக் கொள்ளட்டும், அண்ணாமலை!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**

தொலைபேசி: 044-2472 6408



**தேவக்கோட்டையை சேர்ந்தவர் கயல் தினகரன். 'கயல்' என்ற இதழை நடத்தியவர், எழுத்தாளர், இதழாளர். கவிஞர் கண்ணதாசன், 'தென்றல்' பத்திரிகையை நடத்திய போது, இவரை துணை ஆசிரியராக நியமித்தார். பின்னர், 'முரசொலி' 'முத்தாரம்' 'மறவன்' போன்ற இதழ்களில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவர், மாநில நுகர்வோர் தீர்ப்பாய உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். அவர் தன் 88ஆம் வயதில் 15-02-2024 அன்று காலமானார். அவரின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு 15-02-2025 அன்று பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவைத் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெற இருக்கிறது.**

# மேக்கப் போட்டு வரும் அகத்தியக் கரடி!

**பிரின்ஸ் என்னாரெஸ் பெரியார்**

உலகம் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது எப்போதும் ரிவர்ஸ் கியரைத் தேடுவது தான் பிற்போக்குவாதிகள், மதவாதிகள், பாசிஸ்டுகளின் போக்காக இருக்கும். அதிலும் குறிப்பாக இந்தியாவில் பிற்போக்குக் கும்பல்தான் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறது. தமிழர்களை எப்படியேனும் தங்கள் வழிக்கு கொண்டு வந்து விட வேண்டும் என்று 'பகீரதப் பிரயத்தனத்தில்' ஈடுபட்டிருக்கும் ஒன்றிய பாஜக அரசு திராவிட இயக்கம் கட்டி எழுப்பிய தமிழ் மொழி உணர்வைத் தமிழ் பெருமிதமாக மாற்றி, அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பார்க்கிறது. தமிழ்நாட்டின் பெருமைகள் என்று எவையெல்லாம் அவர்கள் கண்ணுக்குப் படுகிறதோ, அவற்றுக்கெல்லாம் காவிச் சாயம் பூச முனைந்தார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் இதற்கான பல்வேறு முயற்சிகளில் இறங்கியிருக்கிறது. தட்டுத் தடுமாறி தமிழ்க் கொலை செய்யும் மோடியின் உச்சரிப்பில் பண்டைத் தமிழ் இலக்கிய வரிகள் எல்லாம் பஞ்சர் ஆகிப் போய் இருக்கின்றன.

எம்.ஜி.ஆரில் தொடங்கினார்கள். ராஜேந்திர சோழனின் ஆயிரம் ஆண்டு விழா என்றார்கள். இராமலிங்க வள்ளலாரை அபகரிக்க முயற்சிக்கிறார்கள். திடீரென்று திருக்குறள் காதலராகத் தருண்விஜய் என்று ஒருவர் ஓடி வந்தார். அவர் பங்குக்கு வள்ளுவரைக் காசிக்கு கொண்டு போய் கோணியில் மூடி வைத்திருக்கிறார்கள்.

இப்போது இன்னும் பின்னால் போய் தொல்காப்பியருக்கும் முன்பு அகத்தியர் தமிழ் இலக்கணம் எழுதினார் என்று பழைய கரடியைச் சீவி சிங்காரித்து புதுக் கரடியாகக் கொண்டு வருகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பெரும் முயற்சியால் செம்மொழியான தமிழின் வளர்ச்சிக்கு, ஒன்றிய அரசிடமிருந்து அவர் பெற்றுத் தந்தது தான் செம்மொழித் தமிழாய்வு நிறுவனம். கடந்த 10 ஆண்டுகளில் மட்டுமல்ல, அதற்கும் முன்பு செல்வி ஜெயலலிதா ஆட்சிக்காலம் தொடங்கியதிலிருந்தே, அதற்குரிய சிறப்பை அது இழக்கத் தொடங்கியது. ஆர்.எஸ்.எஸ். கூடாரமாக அதை மாற்றத் தொடர்ந்து முயன்று வருகிறது ஒன்றிய அரசு.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் துணைத்தலைவராக மருத்துவர் சுதா சேஷய்யன் நியமிக்கப்பட்டதற்குக் கண்டனங்கள் எழுந்தன. அதன் இயக்குநராக ஏற்கெனவே ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர் என்று அப்போதே குற்றச்சாட்டு எழுந்தது. இப்போது முழுமையாகக் கூடாரம் காவிமயம்.

இப்போது அகத்தியரின் கமண்டலத்தைத் தேடி நாடு முழுக்க அலைந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் கவிழ்த்தால் மீதமுள்ள காவிரியும் பெருக்கெடுக்கும் என்று கருதுகிறார்களோ என்னவோ?

தொல்காப்பியத்திற்கு முந்தையது அகத்தியம். அகத்தியர் எழுதியது தான் தமிழின் முதல் இலக்கண நூல். அதை அவர் வடமொழியை ஒட்டியே உருவாக்கினார். வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இணைப்பு அவர் என்று அளந்துவிடுகிறார்கள். தேவாரத்தைத் தொகுத்தார். அவர் தான் தலைச் சித்தர் என்கிறார்கள். சித்தர்கள் காலம் எப்போது? தேவாரத்தின் காலம் எது? தொல்காப்பியத்தின் காலம் எது? குறைந்தபட்ச தமிழ் வரலாற்று அறிவும் இல்லாத இக் கதைகளைத் தான் கருத்தரங்குகள் மூலமும், பேச்சு, கட்டுரைப் போட்டிகள் மூலமும் மாணவர்களிடம் கொண்டு சேர்க்க முனைகிறார்கள்.

திருக்குறள் இருக்கிறது; தொல்காப்பியம் இருக்கிறது; அகத்தியம் எங்கே? எதை வைத்து அகத்தியரின் தமிழ்ப் பணியை, இலக்கியச் செழுமையை அளவிடுவார்கள். அள்ளிவிடுவதென்று முடிவெடுத்தபின் இருக்கவே இருக்கின்றன – வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள்! பள்ளி, கல்லூரிகளில் ஆன்மீக கதாகாலட்சேபம் நடத்தலாம். அதில் சுதா சேஷய்யன்களுக்கு அனுபவமுண்டு.

பதவிச் சில்லறைகளை விட்டெறிந்தால், அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் பேச, கருத்தரங்குகள் நடத்தி, ஆளுநருக்கும், ஒன்றிய அரசுக்கும் விசுவாசம் காட்ட நாடெங்கும் சிலர் கிடைத்திருப்பது தமிழினத்தின் கேடுகால அடையாளம்! ஒன்றிய அரசின் அனுசரணை, கடைக்கண் பார்வை வேண்டி நிற்கும் கல்வி நிறுவனங்கள், நேரடி பார்ப்பன – ஆர்.எஸ்.எஸ். நிறுவனங்கள், பினாமி நிறுவனங்கள் எல்லாம் வரிசை கட்டி அகத்தியரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களிடம் ஒரு கதை இருக்கிறது. அதில் வடக்கு தாழ்ந்து, தெற்கு உயர்ந்துவிட்டபோது, அதைச் சமன் செய்ய வடக்கிலிருந்த் வந்தவர் தான் அகத்தியர். அது மூடக் கதை என்பது ஒருபுறம். ஆனால், தெற்கு உயர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் இப்போதும் வடக்கிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார் அகத்தியர்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'அகத்தியன் விட்ட புதுக்கரடி' என்று எழுதினார். புரட்சிக் கவிஞர் திராவிட இயக்கக் கவிஞர். அவரை விடுங்கள்! அவாளின் அடையாளம் சுப்பிரமணிய பாரதியார் என்ன எழுதினார்?

" கடலினைத் தாவும் குரங்கும்  
வெங் கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்,  
வடமலை தாழ்ந்தத னாலே  
தெற்கில் வந்து சமன்செயும் குட்டை முனியும்,  
நதியி னுள்ளேமுழு கிப்போய்  
அந்த நாகர் உலகிலோர் பாம்பின் மகளை  
விதியுற வேமணம் செய்த  
திறல் வீமனும் கற்பனை என்பது கண்டோம்."

உயிர் பெற்ற தமிழர் பாட்டு இப்படித் தானே இருக்க முடியும்? அகத்தியர் கட்டுக் கதையை அம்பலப்படுத்தியிருக்கும் பாரதியாரின் வரிகளுக்கு மாலன்களின் பதில் என்ன?

தமிழர் தம் வரலாற்றுச் சான்றுகளை அறிவியல் முறையில் அகிலம் வியக்க அறிவித்துவிட்டார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்! அதை எப்படி மாய்ப்பது? உண்மையோடு பொய்யைக் கலந்து, பிறகு பொய்யே மெய்யென்று புராணக் குப்பைகளையே வரலாறாகக் காட்டி வழக்காடுவது காவிகளுக்குக் கைவந்த கலை.

தமிழின் வரலாற்றுப் பெருமையை அழிக்க என்ன செய்ய வேண்டும்? அதில் புராணப் புளுகுகளை, போலிப் பெருமிதத்தை உள்ளே செருக வேண்டும். கேட்க இனிக்கும்; பொய்கள், கட்டுக்கதைகள் பெருகும்; உண்மை வரலாறு அடிபட்டுப் போகும். உலக ஆய்வாளர்கள் முகம் சுளிப்பர். இன்னொரு புறம் தமிழுக்கு வழங்கப்பட்டது என்று சொல்லி, அதே பணத்தில் ஆரியப் பண்பாட்டுக்கு விளம்பரம் தேடலாம். ஒரே நேரத்தில் பல முனைகளையும் தாக்க முயற்சிக்கிறார்கள்.

எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி! தமிழ்நாடு அரசு இதனை முற்றிலும் தடுக்க முயற்சிக்க வேண்டும். தமிழின் மீதான ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பு – கண்டன மாநாடு – தமிழறிஞர்களைக் கொண்டு கூட்டப்படும் என்று அறிவித்துள்ளார்.

ஒன்றிய ஆட்சியாளர்கள் அதிகாரத்தின் மூலமும், நாளும் கொட்டப்படும் நிதியின் மூலமும் நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் பண்பாட்டுப் படையெடுப்பை தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போராட வேண்டிய வேளை வந்து விட்டது ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian